# தொழிற்கலை ஆவணப்படுத்தல் செயற்றிட்ட அறிக்கை
# 2017

www.noolahamfoundation.org

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | தொழிற்கலை ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2017/0003 |
| செயற்றிட்ட இடம் | யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் |
| செயற்றிட்ட காலம் | 2017 - 2019 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | Wikimedia Foundation |
| முக்கிய பங்குத்தாரர்கள் | சமூக அமைப்புகள்<br>கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், தன்னார்வலர்கள் |

**நூலக நிறுவனம்**

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

**செயற்றிட்டச் சுருக்கம்**

தமிழ் விக்கிப்பீடியா தமிழ் மொழியின், தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தளங்களைப் பதிவு செய்வதில் ஒரு முன்னோடிக் களமாகத் திகழ்ந்து வந்துள்ளது, வருகின்றது. தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான பல்வேறு தகவல்களை நாம் தொகுத்து வருகிறோம். ஆனால் சில முக்கியமான அறிவுத் தொகுதிகளைப் பதிவு செய்வதில் தடைகள் உள்ளன. போதிய உசாத்துணை வளங்கள் இல்லாமை, முன் எடுத்துக்காட்டுக்கள் இல்லாமை, இணைய இணைப்பு இல்லாமை, ஈடுபாடு கொண்ட பயனர்கள் இல்லாமை என்று பல்வேறு காரணங்கள் தடைகளாக உள்ளன. இவ்வாறு போதிய கவனிப்புப் பெறாத துறைகளில் ஒன்றாக மரபுசார் தொழிற்கலைகள் (trades) மற்றும் அருங்கலைகளும் (crafts), அவைகளைப் பற்றிய அறிவுத் தளங்களும் உள்ளன. இதை நிவர்த்தி செய்யும் வகையில் யாழ்ப்பாணம், மலையகம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் காணப்படுகின்ற தொழிற்கலை சார்ந்த விடயங்களை பல்லூடக முறையில் ஆவணப்படுத்தலே இச்செயற்றிட்டமாகும்.

**இலக்குகளும் நோக்கங்களும்**

தொழிற்கலை ஆவணப்படுத்தல் திட்டமானது பின்வரும் நோக்கங்களைக் கொண்டிருந்தது,

- தொழிற்கலைகள் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தல் (collecting and linking information sources and data about a village)அதாவது இலங்கையின் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் மலையகம் சார்ந்த

இடங்களில் காணப்படும் மரபார்ந்த தொழிற்கலைகள் அடையாளங்காணப்பட்டன.

- பண்பாட்டு பேணலுக்கும் வளர்ச்சிக்கும் வரலாற்று ஆய்வுக்கும் பயன்படக் கூடிய வகையில் அத்தொழிற்கலைகள் ஆவணப்படுத்தப்பட்டு (documentation), ஆவணகப்படுத்தப்பட்டு (archiving), அணுக்கப்படுத்தடுத்தும் (providing open access) செயற்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் மலையகம் ஆகியவற்றின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் அந்த ஊரின் முக்கிய வளங்களை (resources), அமைப்புக்களை (organizations), மனிதர்களை (people), தேவைகளை (needs) அடையாளம் கண்டு அவர்களது வாழ்வியலுடன் தொடர்புபட்ட தொழிற்கலைகள் ஆவணப்படுத்தப்பட்டன.

**செயற்பாடுகள்**

- பின்புல ஆய்வு (Desk Review)
    - சார்பிலக்கிய ஆய்வு (Literature Review)
    - நூற்பட்டியல் உருவாக்கம் (Bibliography)
    - புள்ளி விபரங்கள் சேகரிப்பு ( Secondary Data Collection)
    - முக்கிய வளங்களை, தொடர்புகளை கண்டடைதல்
- களப் பணிகளும் பல்லூடக ஆவணப்படுத்தலும் (Field Work & Multimedia Documentation)
    - பல்லூடகப் பதிவுகளைச் சேகரித்தல், எண்ணிமப்படுத்தல்
    - ஒளிப்படங்கள் எடுத்தல்
    - காணொளிப் படப் பிடிப்பு
    - வாய்மொழி வரலாறுகள்
    - புள்ளிவிபர சேகரிப்பு/ஆய்வு (Primary Data Collection / Survey)
- களஞ்சியப்படுத்தல், பகிர்தல், அணுக்கப்படுத்தல் (Preservation, Dissemination & Access)
    - நூலக ஆவணப் படுத்தல் தளத்தில் உள்ளீடு செய்தல் (Ingesting into the repository)
    - பிற தளங்களில் உள்ளீடு செய்தல் (Sharing the data with other platforms)
    - ஊர் அமைப்புகளோடு அல்லது தளங்களோடு தரவுகளைப் பகிர்ந்தல் (Sharing the data with village organizations)
    - அச்சுவடிவில் அல்லது டிவிடி ஆக தொகுப்பினை வெளியீடு செய்தல்

இவ்வாறான செயற்பாடுகளுக்கூடாக மரபுவழி தொழிற்கலைகளை விவரித்து, அவற்றை பட்டியலாக்கம் செய்து, வகைப்படுத்தி தொழிற்கலைகள் சார்ந்த ஓர் விரிவான ஆய்வுக்கும் ஆவணப்படுத்தலுக்கும் உதவும் வகையில் இச்செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.

**அடைவுகள்**

- இச்செயற்றிட்டம் ஊடாக எட்டு சந்திப்புக்கள், கலந்துரையாடல்கள், மற்றும் களப்பயணங்களுக்கூடாக
  தும்புத் தொழில்,மட்பாண்டக் கலை, சுண்ணாம்புத் தொழில், பன் தொழில், பிரம்புத் தொழில், நெசவு, கூத்து ஒப்பனை பொருட்கள், மரவேலைக்கலை, காவடி

ஆட்டம், மரபு மீன்பிடித் தொழில்நுட்பங்கள், உலோக வேலை ஆகியவை ஆவணப்படுத்தப்பட்டன.
இலங்கையின் கிழக்கு-வடக்கு-மலையக தொழிற்கலைகளை பல்லூடக முறையில் ஆவணப்படுத்தல்/கலைகள்

## எதிர்கொண்டசவால்கள்

- தொழிற்கலை ஆவணப்படுத்தல் தொடர்பான விரிவான எதிர்பார்ப்புக்கள் புரவலர்களுக்கு இருக்கலாம். பொருத்தமானவற்றை உள்வாங்கி, பொருத்தமில்லாதவற்றை பொறுமையுடன் விளக்கிச் சொல்ல வேண்டி இருந்தமை.
- தொழிற்கலை ஆவணப்படுத்தல் தொடர்பான எமது அனுபவம் தற்போது தான் நாம் பெற்று வருவதால் விளைபொருட்கள், தேவைப்படும் வளங்கள், ஆற்றல் தொடர்பில் போதிய அனுபவம் இன்னும் இல்லாமல் இருக்கலாம்.
- தொடர்பாடலில் ஏற்பட்ட தாமதம்
- இயற்கையான காலநிலை சார்ந்த இடர்பாடுகள்

## கற்றல்களும் பரிந்துரைகளும்

- இச்செயற்றிட்டத்தினை ஒரு சிறந்த முன்மாதிரியாகக் கொண்டு அதன்மூலம் ஏனைய ஊர்கள், பிரதேசங்களில் காணப்படும் தொழிற்கலை சார்ந்த விடயங்களை ஆவணப்படுத்தும் வகையில் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.
- பல்லூடக ஆவணப்படுத்தலை மேற்கொள்ளப் பொருத்தமான போதிய கருவிகளை நூலகம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## பின்னிணைப்புக்கள்

https://commons.wikimedia.org/wiki/Category:Coir_work_in_Sri_Lanka
https://commons.wikimedia.org/wiki/Category:Pottery_in_Sri_Lanka
https://commons.wikimedia.org/wiki/Category:Lime_work_of_Sri_Lanka
https://commons.wikimedia.org/wiki/Category:Papyrus_Crafts_of_Sri_Lanka
https://commons.wikimedia.org/wiki/Category:Weaving_in_Sri_Lanka
https://commons.wikimedia.org/wiki/Category:Costumes_and_props_for_Koothu
https://commons.wikimedia.org/wiki/Category:Wood_crafts_of_Sri_Lanka
https://commons.wikimedia.org/wiki/Category:Kavadi_Aattam_of_Tamils_of_Sri_Lanka
https://commons.wikimedia.org/wiki/Category:Traditional_fishing_techniques_in_Sri_Lanka
https://commons.wikimedia.org/wiki/Category:Metalworking_in_Sri_Lanka